# சமூகச் சிற்பிகள்

---

**Que.1. வினா** **[Marks :(2)]**

**பிறமொழிச் சொற்களுக்கு இணையானத் தமிழ்ச் சொல்லை எழுதுக.**

**அ) சொசைட்டி -**

**ஆ) க்ளாஸ்மேட் -**

**இ) ப்ரண்ட்ஷிப் -**

**ஈ) காம்பவுண்ட் –**

**Ans.** மதிப்பீட்டுக் குறிப்பு:

அ) சொசைட்டி - சமுதாயம்

ஆ) க்ளாஸ்மேட் - வகுப்புத்தோழன்

இ) ப்ரண்ட்ஷிப் - நட்பு

ஈ) காம்பவுண்ட் – மதிற்சுவர்

**Que.2. வினா** **[Marks :(3)]**

**சாதி களையப்பட வேண்டியது என்னும் கருத்தை வலியுறுத்தி டிசம்பர் 6. அம்பேத்கர் பிறந்தநாளை முன்னிட்ட நடைபெறும் விழிப்புணர்வு முகாமிற்கானத் துண்டுப் பிரசுரம் தயார் செய்க.**

**Ans.** மதிப்பீட்டுக் குறிப்பு:

அமைப்பு 1

இடம், தேதி 1

கருத்து 1

**Que.3. வினா** **[Marks :(4)]**

**தானங்களில் சிறந்தது இரத்ததானம். பள்ளியில் நடைபெறும் இரத்ததான விழிப்புணர்வில் ‘இரத்ததானத்தின் மேன்மைகள்’ என்னும் தலைப்பில் உரையாற்றுவதற்கான சொற்பொழிவுரை தயார் செய்க.**

**Ans.** மதிப்பீட்டுக் குறிப்பு:

முகமன் 1

இரத்ததானத்தின் சிறப்பு, முக்கியத்துவம் 1

மேற்கோள் 1

முடிவு

**Que.4. வினா** **[Marks :(3)]**

**‘புதிய சைக்கிள்’ என்னும் கதையில் வரும் மோகன் கதாபாத்திரத்திற்கு ஏற்பட்ட அனுபவம் போல் உனக்கு ஏற்பட்ட அனுபவத்தை அனுபவக் குறிப்பாக எழுதுக.**

**Ans.** மதிப்பீட்டுக் குறிப்பு:

அனுபவம் 1½

விளக்கம் 1½

**Que.5. வினா** **[Marks :(3)]**

**ஆகஸ்ட் 28-ஆம் நாள் அய்யன்காளி பிறந்தநாளை முன்னிட்டு உன் பள்ளியில் காலை 10 மணியளவில் மாபெரும் கருத்தரங்கம் “அய்யன்காளியும் சமுதாயப் பார்வையம்” என்னும் தலைப்பில் நடைபெறவுள்ளது. இதனை அறிவிக்கும் பொருட்டு சுவரொட்டி ஒன்று தயார் செய்க.**

**Ans.** மதிப்பீட்டுக் குறிப்பு:

உள்ளடக்கச் செய்தி

அமைப்பு

தலைப்பு

சொற்சுருக்கம்

**Que.6. தூய தமிழ் நடையில் எழுதுக.** **[Marks :(3)]**

**ஆளவந்தார் : சாமிநாதன், நான் அதைச்சொல்லலே. உள்ளே வாங்கன்னேன்.**

**சாமிநாதன் : (உட்கார்ந்து கொண்டே) ஏங்க ஆளவந்தார், உக்கார்றது இருக்கட்டும்... உங்களோட மகன் செல்வம் செய்யறது உங்களுக்கே நல்லா இருக்கா?**

**ஆளவந்தார் : ஏங்க சாமிநாதன், என்னோட மகன் செல்வம் அப்படி என்ன செஞ்சுட்டான்? விவரமா சொன்னாதானே தெரியும்?**

**மதிப்பீட்டுக் குறிப்பு:**

**ஆளவந்தார் : சாமிநாதன், நான் அதைச் சொல்லவில்லை. உள்ளே வாங்க அண்ணா என்றேன்.**

**சாமிநாதன் : (உட்கார்ந்து கொண்டே) ஏங்க ஆளவந்தார், உக்கார்வது இருக்கட்டும்... உங்களுடைய மகன் செல்வம் செய்வது உங்களுக்கே நன்றாக இருக்கிறதா?**

**ஆளவந்தார் : ஏங்க சாமிநாதன், என்னுடைய மகன் செல்வம் அப்படி என்ன செய்துவிட்டான்? விவரமாகச் சொன்னால்தான் தெரியும்?**

**Ans.** தூயத்தமிழ் நடையில் எழுதுதல்

**Que.7. வினா** **[Marks :(3)]**

**சமூக ஏற்றத்தாழ்வுக்கு நீ கூறும் காரணங்களைக் குறிப்பாக எழுதுக.**

**Ans.** மதிப்பீட்டுக் குறிப்பு:

கருத்து 2

விளக்கம் 1

**Que.8. வினா** **[Marks :(3)]**

**'கண்மூடிப் பழக்கமெல்லாம் மண்மூடிப்போக' என்னும் பொன்மொழி உணர்த்தும் கருத்தினைக் குறிப்பாக எழுதுக.**

**Ans.** மதிப்பீட்டுக் குறிப்பு:

பொன்மொழி விளக்கம் -1

கண்மூடி வழக்கங்கள் களையப்பட வேண்டியவை

என்றும் சமுதாயத்தை விட்டு ஒழிக்கப்படவெண்டியவை -1

வெளிப்பாடு -1

**Que.9. வினா** **[Marks :(2)]**

**பொருத்துக:**

**அ) இருட்டறையில் உள்ளதடா**

**உலகம் சாதி இருக்கின்றதென்பானும் - வள்ளலார்**

**இருக்கின்றானே.**

**ஆ) ஜாதியில்லை, மதமில்லை**

**படைப்புகளில் வேறுபாடில்லை - அம்பேத்கர்**

**இ) கண்மூடிப் பழக்கமெல்லாம்**

**மண்மூடிக்போக - பாரதிதாசன்**

**ஈ) சாதிகளையப்பட வேண்டிய களை – குருதேவர்**

**Ans**. மதிப்பீட்டுக் குறிப்பு:

அ) இருட்டறையில் உள்ளதடா

உலகம் சாதி இருக்கின்றதென்பானும் - பாரதிதாசன்

இருக்கின்றானே.

ஆ) ஜாதியில்லை, மதமில்லை

படைப்புகளில் வேறுபாடில்லை - குருதேவர்

இ) கண்மூடிப் பழக்கமெல்லாம்

மண்மூடிக்போக - வள்ளலார்

ஈ) சாதிகளையப்பட வேண்டிய களை – அம்பேத்கர்

**Que.10. வினா** **[Marks :(4)]**

**“காந்தியால் உலகம் தழைப்பது நன்றா?**

**சமய பேதம் வளர்ந்து தளர்வது நன்றா?**

**மாந்தரிற் சாதி எழுப்புவது சரியா?**

**மக்கள் ஒரே குலமாய் வாழ்வது சரியா?**

**வீணரைப் பணிவது மக்களின் கடனா?**

**மேலும் உழைப்பினிலே ஏவுதல் கடனா?**

**னாணு மூடவழக்கம் நாடுதல் பெரிதா?**

**நல்லறிவென்னும் செல்லுதல் பெரிதா?”**

**- பாரதிதாசன்.**

**பாடலினை நயம்பாராட்டி எழுதுக.**

**Ans.** மதிப்பீட்டுக் குறிப்பு:

பொருள் நயம் 1

மையக்கருத்து 1

எதுகை, மோனை, சொல்நயம் 2

உழைக்கும் மக்கள் யாவரும் ஒருவர் பெற்ற மக்களே.”

- கண்ணதாசன்.

இவ்விருபாடல்களையும் ஒப்பீடு செய்து ஒப்பீட்டுக் குறிப்பு எழுதுக.

**Que.11. வினா** **[Marks :(4)]**

**“ஏழையென்றும் அடிமையென்றும்**

**எவனும் இல்லை ஜாதியில்**

**இழிவுகொண்ட மனிதரென்பது**

**இந்தியாவில் இல்லையே”**

**பாரதியார்.**

**“ஒன்று எங்கள் சாதியெ ஒன்று எங்கள் நீதியே**

**உழைக்கும் மக்கள் யாவரும் ஒருவர் பெற்ற மக்களே.”**

**- கண்ணதாசன்.**

**இவ்விருபாடல்களையும் ஒப்பீடு செய்து ஒப்பீட்டுக் குறிப்பு எழுதுக.**

**Ans.** ஒப்பீட்டுக் குறிப்பு:

பாடல்களின் பொருள் 1

கருத்து 2

ஒப்பீட்டு எழுதுதல் 1

**Que.12. வினா** **[Marks :(3)]**

**“மதத்தைச் சொல்கிறாய்**

**சாதியைச் சொல்கிறாய்**

**எப்போது**

**மனிதன் என்று நீ**

**சொல்லப் போகிறாய்.”**

**இக்கவிதை வரிகளால் ஆசிரியர் மு.மேத்தா கூற வரும் கருத்தினை விமர்சனக் கண்ணோட்டத்தில் எழுதுக.**

**Ans.** மதிப்பீட்டுக் குறிப்பு:

சாதிபேதமின்மை, மனிதநேயம் வளர்த்தல் 2

விமர்சனப்பாங்கு 1

**Que.13. வினா** **[Marks :(3)]**

**கவிஞர் மு.மேத்தா – குறிப்பு எழுதுக.**

**Ans.** மதிப்பீட்டுக் குறிப்பு:

பிறப்பு 1

சாதனை 1

நூல்கள் 1

**Que.14. வினா** **[Marks :(5)]**

**பள்ளியில் நடைபெறும் சுதந்திர தின விழாவிற்காகக் கட்டுரைப்போட்டி நடத்தப்படுகிறது. அதில் 'கே.கேளப்பன் அவர்களின் சமுதாயப் பணி' என்னும் தலைப்பு கொடுக்கப்படுகிறது. அதற்கான கட்டுரை தயார் செய்க.**

**குறிப்பு: பிறப்பு – ஆளுமைத்திறன் – போராட்டங்கள்.**

**Ans.** மதிப்பீட்டுக் குறிப்பு:

அமைப்பு 1

பிறப்பு, போராட்டங்கள், சமுதாயப்பணி, ஆளுமைத்திறன் 2

மேற்கோள் 1

மொழிநடை 1

**Que.15. வினா** **[Marks :(5)]**

**சாதிகளின் பெயர்கள் சொல்லிக்கொண்டு இன்றும் பல இடங்களில் அநீதிகள் இழைக்கப்படுகிறது. இதன் காரண காரியங்களை மையப்படுத்தி பத்திரிகைக்குத் தலையங்கம் ஒன்று எழுதுக.**

**Ans**. மதிப்பீட்டுக் குறிப்பு:

தலைப்பு 1

பிரச்சனை 1

காரண காரியங்கள் 2

தீர்வு 1

**Que.16. வினா** **[Marks :(5)]**

**கே.கேளப்பன் அவர்கள் 'கேரளகாந்தி' என அழைக்கப்படுகிறார். இப்பட்டத்திற்கு இவர் பொருத்தமானவரா? எனில் உன் கருத்துக்களைக் குறிப்பாக எழுதுக.**

**Ans**. மதிப்பீட்டுக் குறிப்பு:

வழக்கறிஞர்.

அர்ப்பணிப்பு உணர்வு.

எளிமை.

காந்தியின் இடுபாடு.

அறப்போராட்டங்கள்.

காந்தி வழியில்.

காந்தியச் சிந்தனைகள்.

**Que.17. வினா** **[Marks :(1)]**

**பொருந்தாதது தேர்வு செய்க.**

**அ) கே.கேளப்பன் - ஐக்கிய கேரளம்**

**ஆ) வைகுண்டசுவாமி - சமத்துவ சமாஜம்**

**இ)அய்யன்காளி - சாதுஜன பரிபாலனயோகம்**

**ஈ) சட்டம்பி சுவாமிகள் - குருவாயூர் சத்தியாகிரகம்.**

**Ans.** மதிப்பீட்டுக் குறிப்பு:

ஈ) சட்டம்பி சுவாமிகள் - குருவாயூர் சத்தியாகிரகம்.

**Que.18. வினா** **[Marks :(1)]**

**குருவாயூர் சத்தியாகிரகத்திற்குத் தலைமை தாங்கியவர்……………..**

**அ) ஏ.கெ.கோபாலன் ஆ) கே.கேளப்பன்**

**இ) ஈ.வே.ரா.பெரியார் ஈ) வைகுண்டசுவாமி**

**Ans.** மதிப்பீட்டுக் குறிப்பு : ஆ) கே.கேளப்பன்

**Que.19. வினா** **[Marks :(3)]**

**கேரள காந்தி கே.கேளப்பன் சிறுகுறிப்பு எழுதுக.**

**Ans.** மதிப்பீட்டுக் குறிப்பு:

பிறப்பு 1

இளம்பருவம் 1

சமூக அக்கறை 1

**Que.20. வினா** **[Marks :(1)]**

**கே.கேளப்பன் அவர்கள் பிறந்த நாள்………………**

**அ) 1890 செப்படம்பர் 9 ஆ) 1890 செப்படம்பர் 19**

**இ) 1890 செப்படம்பர் 29 ஈ) 1890 செப்படம்பர் 7**

**Ans.** மதிப்பீட்டுக் குறிப்பு : அ) 1890 செப்படம்பர் 9

**Que.21. வினா** **[Marks :(1)]**

**'பயோளி' என்னும் இடத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.**

**அ) பாரதிதாசன் ஆ) வள்ளலார்**

**இ) கே.கேளப்பன் ஈ) அம்பேத்கர்**

**Ans.** மதிப்பீட்டுக் குறிப்பு : இ) கே.கேளப்பன்

**Que.22. வினா** **[Marks :(1)]**

**கூற்று-1: கே.கேளப்பன் அவர்கள் கேரளகாந்தி என அழைக்கப்படுகிறார்.**

**கூற்று-2: கே.கேளப்பன் அவர்கள் தமிழ்நாட்டில் தோன்றிய சமதாய மறுமலர்ச்சிப் போராட்ட வீரர்.**

**அ) கூற்று 1 சரி 2 தவறு ஆ) கூற்று 1 தவறு 2 சரி**

**இ) கூற்று 1சரி 2 சரி ஈ) கூற்று 1 சரி 2 தவறு**

**Ans.** மதிப்பீட்டுக் குறிப்பு : அ) கூற்று 1 சரி 2 தவறு

**Que.23. வினா** **[Marks :(1)]**

**பொருந்தாததைத் தேர்வு செய்க.**

**அ) கே.கேளப்பன் ஆ) அம்பேத்கர்**

**இ) அய்யன்காளி ஈ) நாராயண குரு**

**Ans.** மதிப்பீட்டுக் குறிப்பு : ஆ) அம்பேத்கர்

**Que.24. வினா** **[Marks :(4)]**

**இன்றும் பல கிராமங்களில் சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்ட மக்கள் வாழ்கின்றனர். அவர்களின் வாழ்க்கை மேம்பட உன் ஆலோசனைகளைக் குறிப்பாக எழுதுக**.

**Ans.** மதிப்பீட்டுக் குறிப்பு:

தாழ்த்தப்பட்ட மக்கள் இன்று சமூகம் காணும் நிலை 1

மேம்பட ஆலோசனைகள் 1

ஏற்றத்தாழ்வு காணாமை

முன்னிலையில் கொண்டு வருதல்

வாய்ப்புகள் வழங்குதல்.

**Que.25. வினா** **[Marks :(4)]**

**அம்பேத்கரின் வாழ்க்கை வரலாறினை உன் பாடநூல் வாயிலாகக் கற்றுணர்ந்த நீ உனக்கு அவர் ஏற்படுத்தியத் தாக்கத்தை உன் நண்பனுக்கு வெளிப்படுத்தும் விதத்தில் உன் நண்பன்/தோழிக்குக் கடிதம் ஒன்று எழுதுக.**

**Ans.** மதிப்பீட்டுக் குறிப்பு:

முகமன் 1

உள்ளடக்கம் 1

அமைப்பு 1

முடிவு 1

**Que.26. வினா** **[Marks :(2)]**

**அம்பேத்கரின் இலட்சியக் கனவு இன்று நிறைவேறியுள்ளதா? எனில் உன் கருத்துக்களைக் குறிப்பாக எழுதுக.**

**Ans.** மதிப்பீட்டுக் குறிப்பு:

சமூக அன்றைய அவலங்கள் -1

இன்றும் மாறாத சில அவலங்கள் -1

மாற்றம் ஏற்படாத காரணங்கள் -1

**Que.27. வினா** **[Marks :(2)]**

**“உன்னுடைய நிறைகளை**

**ஊரெங்கும் சொல்லிக்கொள்**

**எதற்காக**

**அடுத்தவர் குறைகளை**

**ஆராய்ச்சி செய்கிறாய்."**

**மோனைக்கு விளக்கம் தந்து, இப்பாடல் வரிகளில் இடம்பெற்றுள்ள மோனைச் சொற்களை எடுத்தெழுதுக.**

**Ans.** மதிப்பீட்டுக் குறிப்பு :

முதல் எழுத்து ஒன்றுபோல் வருவது மோனைச் சொற்கள்.

**Que.28. வினா** **[Marks :(1)]**

**குருவாயூர் சத்தியாகிரகம் துவங்கப்பட்டது எப்பொழுது………………..**

**Ans.** மதிப்பீட்டுக் குறிப்பு : 1931-நவம்பர்-1.

**Que.29. வினா** **[Marks :(1)]**

**குருவாயூர் சத்தியாகிரகம் யார் தலைமையில் துவங்கப்பட்டது.**

**Ans.** மதிப்பீட்டுக் குறிப்பு : கேளப்பன்.

**Que.30. வினா** **[Marks :(1)]**

**இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவர்……………….**

**Ans.** மதிப்பீட்டுக் குறிப்பு : டாக்டர்.இராஜேந்திர பிரசாத்.

**Que.31. வினா** **[Marks :(1)]**

**இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்கியர்…………..**

**Ans.** மதிப்பீட்டுக் குறிப்பு : அம்பேத்கர்

**Que.32. வினா** **[Marks :(2)]**

**சாதிமத பேதங்களை ஒழித்து ஒற்றுமையை நிலைநாட்ட வேண்டுமென்ற எண்ணத்தில் நடைபெறும் ஊர்வலத்தில் ஏந்திச் செல்வதற்கான முத்திரை வாக்கியங்கள் எழுதுக.**

**Ans.** மதிப்பீட்டுக் குறிப்பு:

சுருங்கக் கூறல்.

எதுகை, மோனை.

கருத்துத் தொடர்பு

**Que.33. வினா** **[Marks :(1)]**

**கேரளத்தில் நடந்த வைக்கம் போராட்டத்தில் பங்குபெற்றதால் பெரியாருக்குக் கொடுக்கப்பட்ட சிறப்புப் பெயர்…………**

**Ans.** மதிப்பீட்டுக் குறிப்பு : வைக்கம் வீரர்

**Que.34. வினா** **[Marks :(1)]**

**வைக்கம் போராட்டத்தில் முக்கியப் பங்கு பெற்ற தமிழ் நாட்டுச் சீர்திருத்தச் செம்மல்.**

**Ans.** மதிப்பீட்டுக் குறிப்பு : தந்தைப்பெரியார்.

**Que.35. வினா** **[Marks :(1)]**

**ஐக்கிய கேரளம் எங்கள் பிறப்புரிமை என்ற பெயரில் போராட்டத்தை ஆரம்பித்தவர்...............**

**Ans.** மதிப்பீட்டுக் குறிப்பு : கேளப்பன்

**Que.36. வினா** **[Marks :(5)]**

**ஆசிரியர் தினத்தை முன்னிட்டு 'சமுதாய மறுமலர்ச்சி சிற்பி அண்ணல் அம்பேத்கர்' என்னும் தலைப்பில் கட்டுரைப்போட்டி நடைபெறவுள்ளது. அதற்கான கட்டுரை தயார் செய்க.**

**குறிப்பு: அம்பேத்கரின் பிறப்பு – கல்வி – மூடநம்பிக்கை எதிர்ப்பு – அறியாமை அகற்றும் சூரியன் – சமத்துவ நோக்கு.**

**Ans.** மதிப்பீட்டுக் குறிப்பு:

வடிவம்.

பிறப்பு, கல்வி.

சமுதாயப்பணி, சமத்துவ நோக்கு.

மேற்கோள்.

மொழிநடை.

**Que.37. வினா** **[Marks :(1)]**

**தந்தைப்பெரியார் ஆலய நுழைவுப் போராட்டம் நடத்திய இடம்............**

**Ans.** மதிப்பீட்டுக் குறிப்பு : வைக்கம்

**Que.38. வினா** **[Marks :(1)]**

**மகாத்து குளத்தில் தண்ணீர் எடுக்கும் போராட்டம் நடத்தியவர்.**

**அ) பெரியார் ஆ) கேளப்பன்**

**இ) அம்பேத்கர் ஈ) பாதிரியார்**

**Ans.** மதிப்பீட்டுக் குறிப்பு : இ) அம்பேத்கர்

**Que.39. வினா** **[Marks :(3)]**

**மனித உரிமைக்காக நடைபெற்ற போராட்டங்கள் குறித்துக் குறிப்பு வரைக**

**Ans.** மதிப்பீட்டுக் குறிப்பு:

வைக்கம் போராட்டம்.

குருவாயூர் சத்தியாகிரகம்.

ஐக்கிய கேரளம்.

**Que.40. வினா** **[Marks :(3)]**

**போக்குவரத்துக்கு இடையூராக இருக்கும் பிளக்ஸ் போர்டுகளை அகற்றும் சமூகப்பணி மேற்கொள்ளும் டிராபிக் ராமசாமி அவர்களிடம் நேர்காணல் காண்பதற்கான வினா நிரல் தயார் செய்க.**

**Ans.** மதிப்பீட்டுக் குறிப்பு :

சமூக மறுமலர்ச்சியில் ஈடுபாடுடைய பொருத்தமான

ஆறு வினாக்கள். 6x½ = 3

**Que.41. வினா** **[Marks :(1)]**

**அம்பேத்கருக்குப் பாரதரத்னா விருது வழங்கிய வருடம்.................**

**Ans.** மதிப்பீட்டுக் குறிப்பு : 1990

**Que.42. வினா** **[Marks :(4)]**

**பள்ளி இலக்கிய மன்றத்தில் உரையாற்றுவதற்காக ‘அம்பேத்கரின் அரும்பணி’ என்னும் தலைப்பில் சொற்பொழிவுரை தயார் செய்க**

**Ans.** மதிப்பீட்டுக் குறிப்பு:

துவக்க உரை.

அம்பேத்கரின் வாழ்க்கை.

அவரின் அரும்பணிகள்.

மொழிநடை.

**Que.43. வினா** **[Marks :(4)]**

**‘சாதி களையப்பட வேண்டிய களை’ என்ற அம்பேத்கரின் கூற்றுக்கு உன் கருத்துக்களை விமர்சனக் கண்ணோட்டத்தில் எழுதுக.**

**Ans.** மதிப்பீட்டுக் குறிப்பு :

கூற்றோடு சமுதாயநிலையை ஒப்புமைப்படுத்துதல்.

மாறவேண்டிய நிலைகள்.

புதிய சமூகம்.

மொழிநடை

**Que.44. வினா** **[Marks :(3)]**

**அம்பேத்கரின் சாதனைகளைப் பற்றிக் குறிப்பு எழுது**

**Ans.** மதிப்பீட்டுக் குறிப்பு:

அரசியலைமைப்புச் சட்ட வரைவு உருவாக்கியவர்.

சிறந்த கல்வியாளர், சட்டமேதை.

வழக்கறிஞர்.

சமுதாய மாற்றங்களுக்கு உறுதுணை

**Que.45. வினா** **[Marks :(3)]**

**அம்பேத்காரின் பள்ளி வாழ்க்கையில் ஏற்பட்ட கசப்பான அனுபவங்களைப் படித்த நீ இன்று உனக்கு பள்ளியில் ஏற்பட்ட சுவையான அனுபவங்களை அனுபவக் குறிப்பாக எழுதுக.**

**Ans.** மதிப்பீட்டுக் குறிப்பு:

மாணவர்கள் தங்கள் அனுபவங்களை வெளியிடுதல்.

மொழிநடை .

**Que.46. வினா** **[Marks :(1)]**

**அதே சிறுவன் ஐம்பதாண்டுகளுக்குப்பின் 1947-இல் மிடுக்கான உடையணிந்து மாமனிதனாக வந்து நின்றார். இங்குக் குறிப்பிடும் சிறுவன்.....................**

**Ans.** மதிப்பீட்டுக் குறிப்பு : அம்பேத்கர்.

**Que.47. வினா** **[Marks :(3)]**

**அம்பேத்கரின் பள்ளி வாழ்க்கையைப் பற்றிக் குறிப்பு எழுதுக.**

**Ans.** மதிப்பீட்டுக் குறிப்பு:

பள்ளியில் மகிழ்ச்சி இல்லை.

அவரின் வருகையை யாரும் விரும்பவில்லை.

சரிசமமாக உட்கார இடமில்லை.

உட்காரக் கோணிப்பை கொண்டுவரும் நிலை.

**Que.48. வினா** **[Marks :(1)]**

**அம்பேத்கரின் பிறப்பிடம்...............**

**Ans.** மதிப்பீட்டுக் குறிப்பு : தபோலி

**Que.49. வினா** **[Marks :(3)]**

**உம் பள்ளியில் சமுதாய மறுமலர்ச்சிக்கு வித்திட்ட சமுதாயத் தொண்டினைப் பற்றி எடுத்துரைக்கும் கருத்தரங்கம் நடைபெறவுள்ளது. இதை நீ அறிவிக்கும் பொருட்டு சுவரொட்டி ஒன்று தயார் செய்க.**

**Ans.** மதிப்பீட்டுக் குறிப்பு : அமைப்பு, இடம், தேதி, சிறப்பு, நிகழ்ச்சி.

**Que.50. வினா** **[Marks :(5)]**

**சீர்திருத்தவாதிகளின் தீவிரமான போராட்டங்களும், விழிப்புணர்வு பிரசாரங்களும், இலக்கியப் படைப்புகளும் கேரளத்தின் மறுமலர்ச்சிக்கு வித்திட்டன என்பதை வலியுறுத்தி 'சமுதாய மறுமலர்ச்சி நாயகர்கள்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.**

**குறிப்பு: சட்டம்பி சுவாமிகள் – நாராயணகுரு – வைகுண்டசுவாமி –**

**சாவற பாதிரியார்.**

**Ans.** மதிப்பீட்டுக் குறிப்பு:

மொழிநடை

கருத்து

அமைப்பு

நாயகர்கள்

சமுதாயத் தொண்டுகள்

மறுமலர்ச்சிகள்

**Que.51. வினா** **[Marks :(3)]**

**சாவற பாதிரியாரின் சமூக மறுமலர்ச்சியினைப் பற்றிக் குறிப்பு வரைக.**

**Ans.** மதிப்பீட்டுக் குறிப்பு:

சாதி மதத்திற்கு எதிரானவர்.

அனைவருக்கும் கல்வி.

ஏற்றத்தாழ்வுக்கு எதிராக.

**Que.52. வினா** **[Marks :(1)]**

**சாவற பாதிரியாரின் இயற்பெயர்..................**

**Ans**. மதிப்பீட்டுக் குறிப்பு : குரியாக்கோஸ் ஏலியாஸ் சாவற

**Que.53. வினா** **[Marks :(3)]**

**அய்யன்காளி அவர்களின் சமுதாயத் தொண்டினைப் பற்றிக் குறிப்பு வரைக.**

**Ans.** மதிப்பீட்டுக் குறிப்பு:

தீண்டாமைக்கு எதிராக.

தாழ்த்தப்பட்டோருக்கு எதரிராக.

அநீதிக்கு எதிராக.

தலைப்பாகை, ஆபரணங்கள் அணியக்கூடாது என்பதற்கு எதிராக.

**Que.54. வினா** **[Marks :(1)]**

**அய்யன்காளி அவர்கள் தொடங்கிய சமுதாய மறுமலர்ச்சி இயக்கம்………..**

**அ) சமத்துவ சமாஜம் ஆ) சாதுஜன பரிபாலனயோகம்**

**இ) பிரம்ம சமாஜம் ஈ) முஸ்லீம் மகாசபை**

**Ans.** மதிப்பீட்டுக் குறிப்பு : ஆ) சாதுஜன பரிபாலனயோகம்

**Que.55. வினா** **[Marks :(1)]**

**அய்யன்காளி பிறந்த வருடம்………….**

**அ) 1866 ஆ) 1867 இ) 1868 ஈ) 1869**

**Ans.** மதிப்பீட்டுக் குறிப்பு : அ) 1866

**Que.56. வினா** **[Marks :(1)]**

**சமுதாய மறுமலர்ச்சி நாயகர் அய்யன்காளி பிறப்பிடம்………………..**

**Ans.** மதிப்பீட்டுக் குறிப்பு : வெங்ஙானூர்

**Que.57. வினா** **[Marks :(4)]**

**கேரளாவில் சமுதாய மறுமலர்ச்சிக்குப் பாடுபட்டதுபோல் தமிழக மறுமலர்ச்சி நாயகர்களுள் ஒருவரைப் பற்றி விளக்கவுரை எழுதுக.**

**Ans.** மதிப்பீட்டுக் குறிப்பு:

பெரியார், பாரதியார், அண்ணா, பாரதிதாசன் இவர்களுள்

அல்லது இதுபோன்று ஒருவரை விளக்கி எடுத்துரைத்தல்.

**Que.58. வினா** **[Marks :(2)]**

**சமூக மாற்றத்திற்காக வைகுண்டசுவாமி ஆற்றிய அரும் பணிகள் குறித்துக் குறிப்பு வரைக**

**Ans.** மதிப்பீட்டுக் குறிப்பு:

தாழ்த்தப்பட்டோர், ஏழை மக்கள், பாடுபட்டவர்.

அரசாட்சியின் அநீதியை எதிர்த்தார்.

மேலாடைப் போராட்டத்தில் பங்கேற்றார்.

**Que.59. வினா** **[Marks :(1)]**

**மேலாடை அணியக்கூடாது என்பதற்காகப் போராடியவர் இவர்.**

**அ) சாவற பாதிரியார் ஆ) வைகுண்டசுவாமி**

**இ) அய்யன்காளி ஈ) நாராயணகுரு**

**Ans.** மதிப்பீட்டுக் குறிப்பு : ஆ) வைகுண்டசுவாமி

**Que.60. வினா** **[Marks :(1)]**

**வைகுண்டசுவாமியின் இயற்பெயர்………………..**

**Ans.** மதிப்பீட்டுக் குறிப்பு : முத்துக்குட்டி

**Que.61. வைகுண்டசுவாமியின் பிறப்பிடம்.** **[Marks :(1)]**

**அ) கைன கிரி ஆ) வெங்ஙானூர்**

**இ) சுவாமித்தோப்பு ஈ) ஆலுவா.**

**Ans.** மதிப்பீட்டுக் குறிப்பு : இ) சுவாமித்தோப்பு

**Que.62. வினா** **[Marks :(1)]**

**'சமத்துவ சமாஜம்' என்னும் அமைப்பால் சமூகப்பணி மேற்கொண்டவர்……………**

**Ans.** மதிப்பீட்டுக் குறிப்பு : வைகுண்டசுவாமி

**Que.63. கற்றல் அடைவு.** **[Marks :(2)]**

**மறுமலர்ச்சி நாயகர்களைப் பற்றிய செய்திகளைச் சேகரித்து வரலாற்றுக் குறிப்பு எழுதுகிறார்கள்.**

**Ans.** மதிப்பீட்டுக் குறிப்பு:

அ) திருவிதாங்கூர் முஸ்லீம் மகாசபை - வக்கம் அப்துல் காதர் மௌலி

ஆ) சமத்துவ சமாஜம் - வைகுண்டசுவாமி

இ) சாதுஜன பரிபாலன யோகம் - அய்யன்காளி

ஈ) ஐக்கிய கேரளம் - கே.கேளப்பன்

**Que.64. வினா** **[Marks :(2)]**

**முஸ்லீம், தீபிகா என்னும் இரு பத்திரிகைகள் வாயிலாக வக்கம் அப்துல்காதர் மௌலி ஏற்படுத்திய மாற்றங்கள் குறித்துக் குறிப்பு வரைக**.

**Ans.** மதிப்பீட்டுக் குறிப்பு:

சம அந்தஸ்து பெற முயற்சி

கல்விக்கு முக்கியத்துவம்

ஆச்சாரங்களில் வேறுபாடு

**Que.65. வினா** **[Marks :(3)]**

**சமுதாய மறுமலர்ச்சியில் பத்திரிகைகள் ஆற்றியப் பங்கினைக் குறிப்பாக எழுதுக.**

**Ans.** மதிப்பீட்டுக் குறிப்பு:

பத்திரிகைகளில் வெளிவரும் கட்டுரை,

கவிதை, படைப்புகள். படைப்பாளர்கள்,

சமுதாயச் சீரழிவுகளை வெளிப்படுத்த

பத்திரிகைகள்

பயன்படுத்திய விதம்.

**Que.66. வினா** **[Marks :(5)]**

**சமுதாய மறுமலர்ச்சிக்காகப் பாடுபட்ட தலைவர்களைப் பாடநூல் வழி வாசித்த நீ இன்றைய சூழலில் சமுதாய வளர்ச்சிக்குப் பின்னடைவாக இருக்கும் கருத்துக்களை முன்னிறுத்தி “நான் காணும் சமூகம்” என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.**

**குறிப்பு: பண்டையக்கால சமூகநிலை, மாற்றம், இன்றைய சமூக நிலை,**

**இன்றைய சமூகத்தின் தேவை, மாற்றப்படவேண்டியவைகள்.**

**Ans.** மதிப்பீட்டுக் குறிப்பு:

மொழிநடை

கருத்து

பண்டைய நிலை

மாற்றம்

**Que.67. வினா** **[Marks :(4)]**

**“ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்**

**நன்றே நினைமின் நமனில்லை நாளுமே”**

**என்னும் திருமூலரின் வரிகளுக்கு நாராயண குருவின் கருத்துக்கள் பொருந்தும் விதம் பற்றி விளக்கக் குறிப்பு எழுதுக.**

**Ans.** மதிப்பீட்டுக் குறிப்பு:

நாராயணகுரு

சாதி ஏற்றத்தாழ்வு பற்றி

ஜாதி மதம் தெய்வம் சித்தாந்தம்

மனித முன்னேற்ற கோட்பாடு

**Que.68. மறுமலர்ச்சி நாயகர்களைப் பற்றிய செய்திகளைச் சேகரித்து வரலாற்றுக் குறிப்பு எழுதுகிறார்கள்.** **[Marks :(3)]**

**Ans.** மறுமலர்ச்சி நாயகர்களைப் பற்றிய செய்திகளைச் சேகரிக்கச் செய்தல்.

**Que.69. வினா** **[Marks :(3)]**

**சட்டம்பி சுவாமிகள் சமுதாய மறுமலர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பினைப் பற்றிச் சிறு குறிப்பு எழுதுக.**

**Ans.** மதிப்பீட்டுக் குறிப்பு : சட்டம்பி சுவாமிகள் பற்றிய செய்திகள் இடம் பெறவேண்டும்

**Que.70. குஞ்ஞன் பிள்ளை’ என்னும் இயற்பெயர்க்குச் சொந்தக்கார்.**

**அ) சட்டம்பி சுவாமிகள் ஆ) கேளப்பன்** **[Marks :(1)]**

**இ) அம்பேத்கர் ஈ) அய்யன் காளி**

**Ans.** மதிப்பீட்டுக் குறிப்பு : அ) சட்டம்பி சுவாமிகள்

**Que.71. வினா** **[Marks :(3)]**

**கேரளத்தில் சமூக மறுமலர்ச்சிக்குப் பாடுபட்ட தலைவர்களின் பெயர்களைப் பட்டியலிடுங்கள்.**

**Ans.** மதிப்பீட்டுக் குறிப்பு:

நாராயணகுரு

சட்டம்பி சுவாமிகள்

வைகுண்டசுவாமி

அய்யன் காளி

சாவற பாதிரியார்

வக்கம் அப்துல்காதர் மௌலவி

**Que.72. வினா** **[Marks :(5)]**

**“தாழ்த்தப்பட்டோர் பொதுவழிகளில் நடக்கக்கூடாது, செல்லும் வழியில் மேல்சாதியினர் எதிர்ப்பட்டால் அவர்களின் கண்களில் படாமல் மறையவேண்டும்” இதுபோன்ற அவலங்களை மையப்படுத்தி “தாழ்த்தப்பட்டோரும் அவர்கள் எதிர்கொண்ட அவலங்களும்” என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.**

**குறிப்பு: அடிமைத்துவம், உரிமை மறுப்பு, அடக்குமுறை, வரி ஏய்ப்பு.**

**Ans.** மதிப்பீட்டுக் குறிப்பு : 1. கருத்து, மொழிநடை, அமைப்பு.

2. இரண்டு மேற்கோள்கள்.

**Que.73. வினா** **[Marks :(4)]**

**பண்டைய காலத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிராக நடைபெற்ற கொடுமைகள் எண்ணிலடங்கா பாடப்பகுதியின் வாயிலாக நீவீர் அறிந்தவற்றைப் பட்டியலிடுக.**

**Ans.** மதிப்பீட்டுக் குறிப்பு:

அடிமைத்துவம்

ஆடுமாடுகளைப்போல் கருதப்பட்டனர்.

செருப்பு அணியக்கூடாது.

ஓடு விடுகளில் வசிக்கக்கூடாது.

ரவுக்கை அணியக்கூடாது.

வரிகள் வசூலிக்கப்பட்டன.

இதுபோல் எட்டுக் கருத்துக்களாவது இடம்பெறவேண்டும்.

**Que.74. வினா** **[Marks :(3)]**

**பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சமூகத்தில் கடுமையான சாதிமத ஏற்றத்தாழ்வுகளும், அடிமைமுறையும் கேரளத்தில் நடைமுறையில் இருந்தன. இக்கூற்றிற்கு ஆதாரமான உன் கருத்துகளைக் குறிப்பாக எழுதுக.**

**Ans.** சாதி ஏற்றத்தாழ்வு

உரிமைகள் மறுப்பு

பொதுவான சட்டமின்மை

தண்டனைகளில் வேறுபாடு

தீண்டாமை

அடிமைத் தன்மை

**Que.75. வினா** **[Marks :(1)]**

**‘தெய்வத்தின் சொந்தநாடு’ என அழைக்கப்படும் மாமநிலம்.**

**அ) கோவா ஆ) கர்நாடகம்**

**இ) கேரளம் ஈ) தமிழ்நாடு**

**Ans.** மதிப்பீட்டுக் குறிப்பு : இ) கேரளம்